திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு. ச. செல்வ பாலாஜி, பி.இ.

ந.க.எண். 2681/2025/இ1 **நாள் 01. 07. 2025**

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு – திருவண்ணாமலை மாநகராட்சி – மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள அடிஅண்ணாமலை ஊராட்சி கோசாலைப் பகுதி புல எண் 28/1C–ல், 0.84 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை – குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்தல் இறுதி ஒப்புதல் அளித்தல் – தொடர்பாக.

பார்வை :

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண். NQYTJSVI/ 2025 / TCP நாள் 14.03.2025
2. திரு.A நரேஷ்சந்த் த/பெ. அமர்சந்த், நெ.405 தேரடித் தெரு, திருவண்ணாமலை என்பவரின் விண்ணப்பம் நாள் 19.05.2025.
3. அரசாணை (நிலை) எண். 141 (வீட்டுவசதித்துறை), நாள் 16.07.2022.
4. இணை சார் பதிவாளர், திருவண்ணாமலை அவர்களின் அலுவலக ஆவண எண். 3302/2025.
5. மாநகரப் பொறியாளர், திருவண்ணாமலை மாநகராட்சி அவர்களின் சான்று நாள் 30.06.2025
6. திருவண்ணாமலை மாநகராட்சி கருவூல பற்றுச் சீட்டு எண். 040/TVM/6/1/25–26/0004482 நாள் 01.07.2025
7. இம்மாமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 01.07.2025

****

உத்தரவு :

திருவண்ணாமலை மாநகராட்சிப் பகுதியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள அடிஅண்ணாமலை ஊராட்சி கோசாலைப் பகுதி புல எண் 28/1C–ல், 0.84 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்யும் நோக்கில், பார்வை –1ல் காணும் கடிதத்தில், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று பார்வை –2ல் காணும் விண்ணப்பத்தில் "திரு.A நரேஷ்சந்த் த/பெ. அமர்சந்த்" என்பவர் விண்ணப்பத்தில் இறுதி ஒப்புதல் கோரியுள்ளார்.

தொடர் நடவடிக்கையாக, மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை கட்டமைப்பு வசதிப்பணிகளை, மேற்படி நிறுவனமே மேற்கொள்ள, பார்வை–3ல் காணும் அரசாணையின்படி இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.2681/2025/எப்1, நாள் 21.05.2025 மூலம் அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி உரிமையாளரே பணிகளை முடித்தள்ளதை, மாநகராட்சிப் பொறியாளர் நேராய்வு செய்து பணிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளதாக 30.06.2025 அன்று கோப்பில் சான்றளித்துள்ளார்.

பார்வை–6ல் காணும், இம்மாநகராட்சி கருவூல பற்றுச் சீட்டு எண் மூலம், மனைப்பிரிவு அனுமதி கட்டணமாக ரூ.94,000/– (ரூபாய் தொண்ணூற்று நான்காயிரத்து மட்டும்) மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. பார்வை – 4ல் காணும் இணை சார்பதிவாளர், திருவண்ணாமலை அவர்களின் அலுவலக ஆவண மூலம், மேற்படி மனைப்பிரிவிற்காக, உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதியில் ஒதுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள் மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியின் மாமன்றத் தலைவரால் மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கும் பொருட்டு 01.07.2025 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளார்.

ஆகவே, திருவண்ணாமலை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட அடிஅண்ணாமலை ஊராட்சி கோசாலைப் பகுதி, புல எண் 28/1C–ல், 0.84 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு, மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவில் 01 முதல் 19 வரை உள்ள 19 குடியிருப்பு மனைகளுக்கு பார்வை–1ல் காணும் கடிதத்தில், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்கள் அளித்துள்ள தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

1/7/25

ஆணையாளர்,
திருவண்ணாமலை மாநகராட்சி.

1/7/25

பெறுநர்
திரு.A நரேஷ்சந்த் த/பெ. அமர்சந்த்,
நெ.405 தேரடித் தெரு,
திருவண்ணாமலை.

நகல்:–

1. வட்டாட்சியர், திருவண்ணாமலை
2. இணை சார்பதிவாளர், திருவண்ணாமலை
3. வருவாய் ஆய்வாளர், திருவண்ணாமலை மாநகராட்சி
4. The Chairman, Tamil Nadu Real Estate Regularity Authority, No.1A, CMDA Tower II, 1st Floor, Egmore, Chennai – 08